பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

12 12 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மணிப்பூரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

3. விவசாயம், பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் - இத்தாலியும் முடிவு செய்துள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் பாரா விளையாட்டு போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம் உட்பட 8 பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலக அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புடன் நேற்று தொலைபேசியில் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு உறவுகள் மற்றும் மண்டல, சர்வதேச விவகாரங்கள் குறித்து திரு. ட்ரம்புடன் விவாதித்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

தொடர்ந்து இரு நாடுகளும் நெருக்கமாக செயல்பட உறுதிபூண்டுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மணிப்பூரில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

அம்மாநிலத்திற்கு இரண்டு நாள் பயணமாக சென்றுள்ள அவர், இன்று இம்பாலில் உள்ள Nupi Lal நினைவு வளாகத்திற்கு செல்கிறார்.

ஆங்கிலேய அரசுக்கு எதிராக போராடி உயிர்த்தியாகம் செய்த பெண் வீராங்கனைகளுக்கு அவர் அஞ்சலி செலுத்த உள்ளார்.

அதனைத் தொடர்ந்து சேனாபதி மாவட்டத்தில் நிறைவடைந்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் திருமதி திரௌபதி முர்மு, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவும் - இத்தாலியும் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்திய-இத்தாலி வர்த்தக மன்றக் கூட்டத்தில் அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. Antonio Tajani உடன் இணைந்து அவர் பங்கேற்றார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் கூறினார்.

வாகன தொழில்துறை, பசுமை எரிசக்தி, விவசாயம், ஜவுளி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இக்கூட்டத்தில் பேசிய இத்தாலி துணைப் பிரதமர் திரு. Antonio Tajani, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>

தொழிலாளர் நலனில் மத்திய அரசு அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் 197வது கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, ESIC தொடர்பான பலன்கள் அனைத்து தொழிலாளர்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியுடன் செயல்படுவதாக கூறினார்.

இது தொடர்பான சலுகைகளை மேலும் அதிகரிக்க புதிய தொழிலாளர் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமம் ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வை வலுப்படுத்தியுள்ளதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

காசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை கொண்டாடும நிகழ்வாக இது அமைந்துள்ளது என்றார்.

தமிழ் கற்கலாம் என்ற இந்த ஆண்டின் கருப்பொருள் மொழியியல் பன்முகத்தன்மையை எடுத்துரைப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்துப் பகுதி மக்களையும் ஆன்மிகம் மற்றும் கலாச்சாரத்தின் மூலம் இந்நிகழ்வு இணைத்துள்ளதாக திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

<<<<>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

நைரோபியில் நேற்று நடைபெற்ற ஐ.நா. சுற்றுச்சூழல் மாநாட்டில் பேசிய அவர், சுற்றுச்சூழல் பாதுகாபில் மக்களை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது என்றார்.

சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை இயக்கத்தை இந்தியா அறிமுகம் செய்துள்ளது என்றும், இதற்கு சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதைபடிவமற்ற மின் உற்பத்தியில் 50 சதவீத திறனை ஏற்கனவே எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரியசக்தி மேற்கூரை வீடுகள் திட்டம், மக்கள் பங்கேற்புடன் பசுமை எரிசக்தியை ஊக்குவித்து வருவதாக திரு. கீர்த்தி வர்தன் சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாடுகளுக்கு நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 15ஆம் தேதி புறப்பட்டுச் செல்கிறார்.

முதற்கட்டமாக 15ஆம் தேதி ஜோர்டான் செல்லும் அவர் அந்நாட்டு மன்னர் திரு. Abdulla bin Hussain உடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

16ஆம் தேதி எத்தியோப்பியா செல்லும் பிரதமர், அந்நாட்டு பிரதமர் திரு. Abi Ahmed உடன் பேச்சு நடத்த உள்ளார்.

17 மற்றும் 18ஆம் தேதிகளில் ஓமனுக்கு பயணம மேற்கொள்ளும் பிரதமர், அந்நாட்டு மன்னர் திரு. Haitham bin Tariq உடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

<<<<>>>>

தில்லியில் மாவட்டங்களின் எண்ணிக்கை 10-ல் இருந்து 13ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

நிர்வாகத்தை எளிதாக்க இந்த நடவடிக்கை உதவும் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆலோசனைகள் நீண்ட காலமாக நடைபெற்ற போதும் முந்தைய அரசுகள் இது தொடர்பாக முடிவு எடுக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இந்த முடிவு மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பை அதிகரிக்கும் என்றும் கடந்த 10 மாத காலத்தில் தில்லியில் மக்களை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதாகவும் திருமதி ரேகா குப்தா குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் நக்சல் தீவிரவாதம் இல்லாத மாநிலமாக மாறும் நிலையை அடைந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், கடந்த 42 நாட்களில் 42 பேர் சரணடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடைசியாக முக்கிய நக்சலைட்டுகள் என கருதப்படும் இருவர் பாலாகாட் மாவட்டத்தில் சரணடைந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாத த்திற்குள் நக்சல் தீவிரவாத த்தை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த இலக்கு முன்கூட்டியே எட்டப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவின் நடவடிக்கைளே இதற்கு காரணம் என்று திரு. மோகன் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தில்லியில் உலக பாரம்பரிய மருத்துவ மாநாடு வரும் 17ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடைபெற உள்ளதாக சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் திரு. முத்துக்குமார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாரம்பரிய மருத்துவத்தை இந்த மாநாடு ஊக்குவிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

(Voice Byte – Muthukumar – 55 Sec)

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கலாச்சாரப் பரிமாற்ற நிகழ்ச்சிகள் ஒற்றுமையை வலுப்படுத்தியுள்ளதாக அருணாச்சலப்பிரதேச ஆளுநர் திரு. K.T. Parnaik கூறியுள்ளார்.

அசாம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களின் நிறுவன தின கொண்டாட்ட நிகழ்ச்சிகள் இட்டாநகரில் உள்ள ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், மாநிலங்களின் நிறுவன நாள் பிற மாநிலங்களில் கொண்டாடப்படுவது ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வை வலுப்படுத்துவதாக தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு இடையேயான கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சிகள் பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக திரு. Parnaik கூறினார்.

<<<<>>>>

காடுகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பில் கூட்டு முயற்சிகள் அவசியம் என்று ராஜஸ்தான் ஆளுநர் திரு ஹரிபாவ் பாக்டே கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் புலிகள் விழாவை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், புலிகள் காப்பகங்கள், வனப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதாகத் தெரிவித்தார்.

உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் 75 சதவீதம் இந்தியாவில் உள்ளதாக அவர் கூறினார்.

ராஜஸ்தானின் ரந்தம்போர் தேசிய பூங்கா, முகுந்த்ரா புலிகள் காப்பகம் மற்றும் சரிஸ்கா புலிகள் காப்பகம் ஆகியவை நாட்டின் சிறந்த காப்பகங்களாக திகழ்கின்றன என்று திரு ஹரிபாவ் பாக்டே குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஆசிய இளையோர் பாரா விளையாட்டு போட்டியில் இந்தியா இதுவரை 8 பதக்கங்களை வென்றுள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 2 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

மகளிர் பிரிவு டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பேபி சஹானா ரவி தங்கப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஆசிய Korf ball கோப்பை போட்டியில் இந்தியா - இந்தோனேஷியாவை வென்றது.

மலேசியாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் 13-12 என்ற கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

இன்று இந்திய அணி - மலேசியாவை எதிர்கொள்கிறது,

<<<<The End>>>>